# <u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் ஜனவரி திங்கள் 29–ம் நாள் காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

## <u>பொருள்கள்</u>

**<u>பொருள் எண்.: 1</u>**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1. | திரு. செல்வன் ஜார்ஜ். பொதுப்பணி மேற்பார்வையாளர் | 11/2006 | 1030/– |
| 2 | திருமதி.அ.நிர்மலா ஜாய், இளநிலை உதவியாளர் | 12/2005 | 495/– |
| 3 | திரு.ஆர்.தங்கராஜ். துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 12/2006 | 418/– |
| 4 | திரு.பி. மணி, துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்‘ | 10/2006<br>11/2006 | 108/–<br>108/– |
| 5 | திருமதி.கே.மீனாம்பாள், மகப்பேறு ஆயா | 11/2006<br>12/2006 | 235/–<br>282/– |

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 61 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.: 2</u>**

இந்நகராட்சியில் சுனாமி பிரிவில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.ச. ரவி, உதவி செயற் பொறியாளர் | 1/2007 | 7233/– |
| 1. | திருமதி. வி.எஸ். சுப்பு லெஷ்மி, இளநிலை பொறியாளர் | 12/2006 | 1730/– |
| 2 | திருமதி. டி.எஸ். சோபா, பணி ஆய்வர் | 11/2006<br>122006 | 642/–<br>955/– |
| 3 | திருமதி. எம். சாந்தி, சமுதாய அமைப்பாளர் | 12/2006 | 826/– |

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 62 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:3</u>**

இந்நகராட்சியில் உதவி செயற் பொறியாளராக பணிபுரியும் திரு.ச. ரவி, 2006 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அலுவலக பணியாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படியாக ரூ. 12,536/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 63அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்:4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜ் சாலை பகுதியில் பைப்லைனில் பழுது ஏற்பட்டதின் காரணமாக குடிநீர் விநியோகம் தடைப்பட்டது. இதனால் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. நகராட்சி டேங்கர் லாரி தகுதிச் சான்றிதழ் பெற சென்று விட்டதால் தனியார் டேங்கர் லாரி மூலம் 4 முறை குடிநீர் விநியோகம் செய்த வகையில் ரூ.1000/– சம்மந்தப்பட்டவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதியின் பேரில் பணி மேற்கொண்டதையும் அதற்கான செலவினம் ரூ.1000/–ஐ சம்மந்தப்பட்டவருக்கு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 64 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு சாலைப் பகுதியில் கடந்த சில நாட்களாக குடிநீர் பகிர்மானக் குழாயில் ஏற்பட்ட அடைப்பின் காரணமாக குடிநீர் வினியோகம் செய்ய இயலாததாலும், நகராட்சி குடிநீர் லாரி பதிவு சான்றிதழ் பெறுவதற்காக பணிமனைக்கு சென்றுள்ளதாலும், தனியார் லாரி மூலம் குடிநீர் வினியோகம் செய்ததற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 65 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.: 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாம்பசிவபுரம் பகுதியில் அமைந்துள்ள சுனாமி கொட்டகை எண்: 18–லுள்ள மின் அளவியை 13–ம் எண் கொட்டகைக்கு மாற்றுவதற்கான கட்டணம் ரூ. 275/–னை மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று கட்டணம் செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 66 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.:7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மரமடிப் பகுதியில் அமைந்துள்ள சுனாமி கொட்டகை எண்: 38–னை பிரித்து மாற்றிவிட்டு அதேப் பகுதியில் புதிதாக வீடு கட்டவிருப்பதால் மேற்படி கொட்டகையில் நிறுவப்பட்டிருந்த மின் அளவியை 83–ம் எண் கொட்டகைக்கு மாற்றுவதற்கான கட்டணம் ரூ. 275/–னை மின்வாரியத்தியற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று கட்டணம் செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 67 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 8**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு பகுதியில் தற்காலிக சுனாமி ஷெட் எண். 2 –ஐ பிரித்து விட்டு அதே பகுதியில் புதிய குடியிருப்பு கட்டப்படவுள்ளதால் மேற்படி ஷெட்டில் உள்ள மின் அளவியை மாற்றியமைக்க கட்டணமாக ரூ. 275/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ரூ. 275/– னை மின்வாரியத்திற்கு செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 68 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 9</u>**

நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட முற்றிலுமாக வீடுகளை இழந்தவர்களின், வீடுகளுக்கு வழங்கப்பட்டிருந்த குடிநீர் இணைப்புகளை தற்போது அரசால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிரந்தர குடியிருப்பு வீடுகளுக்கு மதிப்பீடு கட்டணமாக ரூ.750/–னை நகராட்சியில் செலுத்தி மீண்டும் குடிநீர் இணைப்பு வழங்கிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**<u>அ.குறிப்பு</u>** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 69 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :10</u>**

சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் பகுதியில் நிரந்தர குடியிருப்புகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. மேற்படி பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்திட ஏதுவாக உலக வங்கியின் நிதி உதவியினை பெற்றிட பிரேரணை அனுப்ப கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து (ந.க.எண்.37760/06/இ2 நாள் 03.07.2006) வரப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் ரூ. 64.00 லட்சத்திற்கு ஆசாத் நகர் பகுதிகளில் அமைந்துள்ள சுனாமி நிரந்தர குடியிருப்பு பகுதிகளுக்கு சிமின்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தடுப்பு சுவர் அமைத்திட பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிரேரணை அனுப்பியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 70 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:11</u>**

குளச்சல் நகராட்சியில் ஆசாத் நகரில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்ட நிரந்தர குடியிருப்பு பகுதிகளுக்கு சிமென்ட் காங்கிரீட் தளம் அமைத்திட அரசாணை எண். 835/20.12.2006 – Revenue (NC IV-1) Department – ல் ரூ.60.00 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**தீர்மானம் எண். 71 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:12</u>**

சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் பகுதியில் நிரந்தர குடியிருப்புகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. மேற்படி பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்திட ஏதுவாக உலவ வங்கியின் நிதி உதவியினை பெற்றிட ரு.64.00 லட்சத்திற்கான பிரேரணை அனுப்பப்பட்டது. இதில் அரசாணை எண். 835/20.12.2006 Revenue (NCIV-I ) Department –ல் ரூ. 60.00 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள தொகை ரூ. 4.00 லட்சத்தினை சேர்த்து ரூ.64.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**<u>அ.குறிப்பு</u>** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 72 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 13</u>**

சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு, அரசின் நிரந்தர குடியிருப்பு தொகுப்பு வீடுகள் நகராட்சிக்குட்பட்ட பல பகுதிகளில் கட்டி கொடுக்கப்பட்டு குடியேறி வருகிறார்கள். மேற்படி குடியிருப்புகளுக்கு புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளது. எனவே மேலும் 1000 புதிய குடிநீர் இணைப்புகள் அனுமதிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**<u>அ.குறிப்பு</u>** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 73 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.: 14**

இந்நகராட்சி சுனாமி நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்கு பணி ஆய்வாளர் பணியிடம் ஒன்றுக்கு பணி நியமனம் செய்யும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு அனுமதி அளித்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 68615/2005/எப்3 நாள் 24.11.2005–ல் உத்தரவிடப்பட்டதின்படி திருமதி. டி.எஸ், சோபா என்பவரை மேற்படி பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டது. மேற்படியார் பணியில் சேர்ந்து 11.12.2006–ல் ஒரு வருடம் முடிவடைந்த நிலையில் மேற்படி பணியிடத்தை 12.12.2006 முதல் மேலும் ஒரு வருட காலத்திற்கு அனுமதி வழங்க சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களைக் கேட்டுக் கொள்ள மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** சுனாமி நிவாரண பணிகள் மேற்கொள்ள, இந்நகர்மன்ற நியமனக்குழு தீர்மானம் எண். 1 நாள் 12.12.2005–ன்படி திருமதி. டி.எஸ், சோபா என்பவரை பணி ஆய்வர் பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டு 11.12.2006–ல் ஒரு வருடம் முடிவடைந்து விட்டதாலும், சுனாமி நிவாரணப் பணிகள் இன்னும் நிறைவடையாததாலும், மேற்படி பணி ஆய்வாளர் பணியிடத்திற்கு 12.12.2006 முதல் மேலும் ஓராண்டிற்கு அனுமதி வழங்க சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களை கேட்டுக் கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 74 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 15**

குளச்சல் நகராட்சிப் பகுதியிலுள்ள மேற்கு கடற்கரை சாலையிலிருந்து வெள்ளிப்பிள்ளையார் கோயில் நோக்கி செல்லும் சாலையில் IDSMT திட்டத்தின்கீழ் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி புதிதாக அமைக்கப்படும் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான ஒரு திறந்த வெளி பொதுக்கிணறு சுனாமி பாதிப்பிற்கு பிறகு உப்பு நீராக மாறியுள்ளதால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. மேலும் அந்த கிணறு தற்போது அமைக்கப்படும் சாலையின் நடுப்பகுதி வரை வருவதால் திடீரென சாலையின் அகலம் குறைகிறது. எனவே இக் கிணற்றினை இடித்து மூடிவிட்டு முழு அகலத்திற்கு சாலைப் பணியினை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 75 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

குளச்சல் நகராட்சிக்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய வீட்டுவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி ஆகிய இனங்களின் வரி வசூலினை தீவிரப்படுத்தும் நோக்கில் 18.12.2006 முதல் 30.12.2006 வரை அனைத்து வார்டுகளுக்கும் வாகனம் மூலம் ஒலிபெருக்கி வைத்தும், நோட்டீஸ் அச்சடித்தும் விளம்பரப்படுத்திய வகையில் ரூ. 3000/–சம்மந்தப்பட்டவர்களுக்கு வழஙகெ மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 76 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்:17**

2007–2008 –ம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்தினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். பொது ஏலம் மற்றும் சிறப்பு கட்டுப்பாடுகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ. எண். | ஏல விபரம் | செலுத்த வேண்டிய முன்பணத் தொகை | கொடுக்கப் பட வேண்டிய சால்வன்சி | சால்வன்சி சான்று கொடுக்க இயலாதவர்கள் செலுத்த வேண்டிய ரொக்க பணம் | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி தினசரி மற்றும் வாரச் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 2,00,000 | 2,00,000 | 1,00,000 | 1.4.2007 முதல் 31.3.2008 முடிய. |
| 2 | இந்நகராட்சி ஆடு, மாடு வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,000 | 5,000 | 1,000 | 1.4.2007 முதல் 31.3.2008 முடிய. |
| 3 | இந்நகராட்சி பகுதியிலிருந்து வெளியே கொண்டு செல்லும் மீன்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 15,000 | 50,000 | 10,000 | 1.4.2007 முதல் 31.3.2008 முடிய. |
| 4 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 50,000 | 1,00,000 | 25,000 | 1.4.2007 முதல் 31.3.2008 முடிய. |
| 5 | இந்நகராட்சி பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10,000 | 25,000 | 5,000 | 1.4.2007 முதல் 31.3.2008 முடிய |
| 6 | அண்ணா சிலை சமீபம் நகராட்சி கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 3,000 | 25,000 | 2,000 | 1.4.2007 முதல் 31.3.2008 முடிய. |

**அ.குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 77 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்:18**

குளச்சல் நகரப்பகுதியில் N.S.S. மாணவர்களை வைத்து நகரத்தை துாய்மைப்படுத்தும் பணி 27.12.2006 முதல் 05.01.2007 வரை 10 தினங்கள் நடைபெற்றது. மேற்படி மாணவர்கள் சாஸ்தாங்கரை அரசு ஆரம்ப பள்ளியில் 10 நாட்கள் தங்க வைக்கப்பட்டனர். மேற்படி பள்ளியில் மின் விளக்கு வசதி இல்லாததால் குழல் விளக்கு அமைத்து மின் விளக்கு வசதி செய்த வகையில் ரூ. 1000/– சம்மந்தப்பட்டவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 78 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்:19**

குளச்சல் நகராட்சிப் பகுதியில் தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாததால் கழிவுநீர் ஆங்காங்கே தேங்கி காணப்படுகிறது. பாதாள சாக்கடைத் திட்டம் இருந்தால் நகரில் சுகாதாரம் மேலும் சிறப்பாக இருக்கும். எனவே மேற்படி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக கண்சல்ட்டன்சியினரை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மூலம் நியமனம் செய்யவும், அதற்காகும் செலவுத் தொகையினை அரசு மானியமாக வழங்க கோரியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 79 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 20</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.74786/2006/பி3 நாள் 04.09.2006 –ன்படி இந்நகராட்சிக்கு UIDSSMT திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள, பணிகளை தேர்வு செய்து திட்டப் பிரேரணை தயார் செய்யவும் கோரப்பட்டுள்ளது, ஆகவே திட்டப் பிரேரணை தயார் செய்வதற்கு அதற்குரிய உத்தேச செலவுத் தொகை ரூ. 5000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிரேரணை தயார் செய்வதற்கு உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 80 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 21</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண்.3380/06/அ1 நாள் 18.09.2006 –ன்படி இந்நகராட்சிக்கு IHSDP திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள, பணிகளை தேர்வு செய்து திட்டப் பிரேரணை தயார் செய்யவும் கோரப்பட்டுள்ளது, ஆகவே திட்டப் பிரேரணை தயார் செய்வதற்கு அதற்குரிய உத்தேச செலவுத் தொகை ரூ. 5000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிரேரணை தயார் செய்வதற்கு உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 81 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்:22**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 28474/2006/யுபிஅ2 நாள் 31.05.2006 –ன்படி சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் பணிகள் எடுத்து செய்வதற்கு ரூ. 81,000/– நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிகளை செய்வதற்கு நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் குளச்சல் பீச் சர்ச் அருகில் துறைமுக குறுக்குத் தெருவில் தார்தளம் அமைக்கும் பணிக்கு ரூ. 88,500/– க்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் ஒதுக்கீட்டுத் தொகையான ரூ. 81,000/– போக மீதித் தொகையினை பொது நிதியிலிருந்து செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணியினை செய்வதற்கு தேவைப்படும் கட்டுமானப் பொருட்களை விலைப்புள்ளி பெற்றும், சிமின்ட் தளம் அமைக்கும் பணியினை துறை மூலம் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 82 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:23</u>**

குளச்சல் நகராட்சியில் பழுதடைந்துள்ள மோட்டாரினை மாற்றுவதற்கு ரூ. 1.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி குளச்சல் நகராட்சி பிரதான சாலையில் பழுதடைந்துள்ள பிரதான குழாயினை மாற்றுவதற்கு ரூ. 1.00 லட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அலுவலகத்திற்கு மதிப்பீடு தயார் செய்து 28.09.2006 அன்று பிரேரணை அனுப்பப்பட்டது. அதன் பிறகு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.30 நாள் 06,12.2006 மூலம் மேற்படி பணிக்கு பதிலாக வெள்ளிப்பிள்ளையார் கோயில் அருகில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி அது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 07.12.2006 அன்று திருத்திய பிரேரணை அனுப்பப்பட்டது. இந்நிலையில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் நகராட்சிகளின் கண்காணிப்புப் பொறியாளர், சென்னை அவர்களிடம் நேரில் ஆலோசனை மேற்கொண்டதில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு மாற்றாக பழுதடைந்துள்ள மின்மோட்டார்களை மாற்றி புதிய மின் மோட்டார்கள் வாஙகுவதற்கு உரிய பிரேரணை அனுப்புமாறு

கூறினார்கள். அதன்படி புதிதாக 3 மின் மோட்டார்கள் வாங்குவதற்கு ரூ. 1.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் திருத்திய பிரேரணை அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 83 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**
**தொகை மீதமிருப்பின் கூடுதலாக ஒரு மின்மோட்டாரும், ஒரு ஸ்டாட்டரும் வாங்கிடவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 24</u>**

இந்நகராட்சியின் முழுமைத் திட்டம் இணக்கம் பெறப்பட்டு பதினைந்து வருடங்கள் ஆகியுள்ளது. நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 28—ன்கீழ் அரசின் ஒப்புதல் பெற புதிய முழுமைத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் கடற்கரை மேலாண்மை திட்டம் பகுதியினை வரைபடத்தில் குறிப்பிட்டும் தற்போது நில உபயோகம் வளர்ச்சி திட்டத்தை வரைபடத்தில் குறிப்பிட்டும் வரைபடம் தயார் செய்யப்பட்டு உள்ளது. மேற்படி முழுமை திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களின் ஒப்புதல் பெற வேண்டி முழுமை திட்டம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங□கலாம்.

**தீர்மானம் எண். 84 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:25</u>**

இந்நகராட்சிப் பகுதியில் உள்ள வீடுகளிலுள்ள செப்டிக் டாங்க் காற்றுக் குழாய்களில் கொசுக்கள் உள்ளே புகுந்து சென்று இனவிருத்தி அடையாமல் இருக்க காற்றுக் குழாய்களில் நைலான் வலை கட்ட முதற் கட்டமாக ஏற்கனவே 1000 வீடுகளுக்கு பணி மேற்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாக மேலும் 2000 வீடுகளில் உள்ள செப்டிக் டாங்க் காற்று குழாய்களில் மேற்படி வலை கட்டுவதற்கான ஸ்டீல் கட்டு கம்பியும், நைலான் வலையும் தேவைப்படுகிறது. மேற்படி பொருட்களை அத்தியாவசியத்தின் பேரில் வாங்கிய வகையில் சம்மந்தப்பட்டவர்களுக்கு ரூ. 6072/— வழங□க மன்றத்தின் அ.னுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவரின் முன் அ.னுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவின தொகையாக ரூ. 6072/— வழங□கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 85 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:26</u>**

இந்நகராட்சி குடிநீர் திட்ட பராமரிப்பில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை சரி செய்ய அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் 1920 உபவிதி 15—ன்கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொண்டதற்கும், அதற்கு செலவான தொகை வழங□கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண்<br>. | பணி விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | பீச் சந்திப்பில் குடிநீர் விநியோக குழாயில் வால்வு பொருத்துதல் | 4577 |
| 2 | பம்பு ரூம்.எண். 4 மற்றும் 5—ல் பழுதுகள் சரி செய்தல் | 3644 |
| 3 | குடிநீர் வினியோக குழாயில் (சாஸ்தங்கரை 28/33 வீட்டு பக்கம் மற்றும் விஜய் இல்லம் பக்கம்) பழுது சரி செய்தல். | 2434 |
| 4 | பெரியபள்ளி ஜங்சன் மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் பக்கம் பழுதுகள் சரி செய்தல். (110 எம்.எம்.பிவிசி நீர் உறிஞ்சும் குழாய் மாற்றுதல்) | 40091 |
| 5 | உந்தும் குழாய்களில் (154/2, 4/76எ. வீட்டுப் பக்கங□களில் உடைப்பு சரி செய்தல். | 6526 |
| 6 | துறைமுக சந்திப்பு 2—வது பம்பு ரூம் முக்கிய குழாய்களில் பழுது சரி செய்தல் | 3320 |
| 7 | 33—ம் எண். பம்பு ரூமில் பானல் போர்டு பழுது ஏற்பட்ட வகையில் சரி செய்தல் | 3924 |

| | | |
|---|---|---|
| 8 | குளச்சவ் பரசேரி சாலையில் 150 எம்.எம். ஏ.சி. குழாய் சரி செய்தல் | 4095 |
| 9 | சாஸ்தாங்கரை பகுதியில் பழுதுபட்ட பிவிசி பைப்பினை மாற்றுதல். | 2793 |
| 10 | டெம்போ ஸ்டான்ட் பக்கம் 150 எம்.எம்.ஏசி பைப் லைன் மாற்றுதல் | 4452 |
| 11 | ளச்சல் நகராட்சி முன்பக்கம் மற்றும் சாலையோரத்தில்160 எம்.எம். பிவிசி பைப் பழுதினை மாற்றுதல் | 3278 |
| 12 | 5–வது ஆழ்குழாய் கிணற்றில் நீர்மூழ்கி மின்மோட்டார் மாற்றுதல் | 12102 |
| 13 | 4–வது ஆழ்குழாய் கிணற்றில் டெலிவரி குழாய் பழுது சரி செய்தல் | 2216 |
| 14 | நீர் உந்தும் குழாய்களில் 3 இடங்களில் பழுது சரி செய்தல் | 5177 |
| 15 | நெசவாளர் தெரு முருகன் கோவில் பக்கம் குடிநீர் குழாய் பதித்தல் | 6143 |
| 16 | காமராஜர் பேருந்து நிலைய அருகாமையில் 150 எம்எம் ஏ.சி.குழாய் சரி செய்தல். | 3529 |
| 17 | சீம்பிளிவிளை, அஞ்சாலிவிளை பகுதியில் 140 சி.சி பிவிசி குழாய் சரி செய்தல், | 3764 |
| 18 | பர்னட்டிவிளை பகுதியில் 140 சிசி, குழாய் பழுதினை சரி செய்தல். | 2441 |
| 19 | சுந்தர் பிறஸ் அருகில் 2 இடங்களில் 160 எம்.எம், ஏ.சி. குழாய் சரி செய்தல். | 6526 |
| 20 | குடிநீர் வினியோக குழாயில் பழுதினை சரி செய்தல் | 3320 |
| 21 | பர்னட்டிவிளை ஆழ்குழாய் கிணற்றில் பைப் பழுதினை சரி செய்து மின் மோட்டார் மாற்றுதல். | 12946 |
| 22 | மரியா ஹார்டுவேர் பக்கம் 160 எம்.எம். பிவிசி பைப் லைன் சரி செய்தல். | 5704 |

அ.குறிப்பு : மன்ற அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 86 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண்:27

அடிபபடை வசதி திட்டம் 2005–2006 –ன்கீழ் மாவட்ட ஆட்சியர், நாகர்கோவில் அவர்களின் செல்முறை ஆணை எண். 8090/அ1/2005 நாள் 19.01.2005–ல் இந்நகராட்சிக்கு ரூ.10.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 பணிகள் (ரூ. 9,54,961/–) மேற்கொள்ளப்பட்டன. மீதம் ரூ. 45,039/– உள்ளது. இந்நிலையில் இந்நகராட்சி அலுவலக வளாகம், பஸ் நிலையம் மற்றும் துறைமுகத் தெருவில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளில் உள்ள 6'' வால்வுகள் பழுதடைந்து குடிநீர் வீணாகிறது. அதனை தடுக்கும் பொருட்டு மேற்படி வால்வுகளை மாற்றி புதிய வால்வு அமைத்திட ரூ.50,000/– மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கும் ரூ. 45,039/– போக மீதி தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 87 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண்:28

குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டப் பணிகளாகிய நீருந்தும் முக்கிய குழாய்களிலும் குடிநீர் வினியோக குழாய்களிலும் மற்றும் குடிநீர் திட்டத்தில் நீரேற்றும் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள நீர் மூழ்கி மின் மோட்டார்கள், பேனல் போர்டுகள், பைப் லைன்கள் இவைகளில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை நகர் மக்களின் நலனை கருத்தில் கொண்டும், போர்க்கால அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொண்டு உடனடி பழுது பார்த்தும் தடையில்லாமல் குடிநீர் வினியோகம் பொதுமக்களுக்கு செல்ல வேண்டியுள்ளதால் கீழ்குறிப்பிட்டுள்ள வேலைகள் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று முறைப்படி விலைப்புள்ளிகள் கோரப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரருக்கு வேலை ஒப்படைத்து நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு செலவான தொகை ரூ. 1,52,549/– க்கும் இதில் முதல் தவணைத் தொகையாக ரூ.1,02,025/ வழங்கியதற்கும், மீதி தொகை ரூ.50,524/– வழங்குவதற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் ஆசாரிமார் தெருவில் அமைந்துள்ள 1.5 எச்.பி. நீர்மூழ்கி மின் மோட்டார் பழுதினை சரி செய்தல் | 4630 |
| 2 | அண்ணாசிலை அருகாமையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் பம்புசெட்டில் பொருத்தப்பட்டுள்ள 725 காப்பர் வயர் பழுதுபட்டுள்ளதை அப்புறப்படுத்தி புதிய வயர் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்துதல். | 6015 |
| 3 | அரசு மருத்துவமனை பக்கம் முக்கிய சாலையில் அமைந்துள்ள குடிநீர் விநியோக குழாயிலும், உய்யாண்டிவிளை பக்கம் அமைந்துள்ள 90 எம்.எம். பிவிசி குழாயில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரி செய்தல். | 2686 |
| 4 | மின்வாரிய அலுவலக பக்கமும், பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலும் அமைந்துள்ள நீர்தேக்கத் தொட்டிக்கு பக்கமும் பொருத்தப்பட்டுள்ள பொதுக் குழாயில் பழுதினை சரி செய்தல். | 3329 |
| 5 | பாலத்தன்கரை அருகாமையில் அமைந்துள்ள சம்பில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டாரை இயங்க வைக்கும் பேனல் போர்டு சிஸ்டம் பழுதுபட்டதை சரி செய்தல். | 2015 |
| 6 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெருவில் அமைந்துள்ள 2–ம் ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்ட 10 குதிரை வேகம் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் பழுதுபட்டதை சரி செய்தல். | 12826 |
| 7 | குளச்சல் மெயின்ரோடு ஆறுமுகா ஜுவல்லரி முன்பக்கம் அமைந்துள்ள 150 எம்.எம். ஏ.சி. நீருந்தும் முக்கிய குழாய் பழுதுபட்டதை சரி செய்தல். | 3529 |
| 8 | துறைமுகத்தெருவில் ஏசுதாஸ் காலனியிலும் மற்றும் பழைய மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பக்கமும் அமைந்துள்ள 2 பொதுக்குழாய் பழுதுபட்டதனை சரி செய்தல். | 1410 |
| 9 | ஈழக்காணிவிளை மற்றும் ஆசாத்நகர் ஆகிய இடங்களில் குடிநீர் விநியோகக் குழாய்கள் 90 எம்.எம், 63 எம்.எம். பிவிசி குழாய்கள் பழுதுபட்டதை சரி செய்தல். | 2152 |
| 10 | பர்னட்டிவிளையில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 10 குதிரை வேகம் கொண்ட மின்மோட்டார் பழுதுபட்டதை சரி செய்தல். | 12006 |
| 11 | வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெருவில் 1–வது பம்பு அறையில் மற்றும் நகராட்சி தண்ணீர் டாங்கர் லாரியிலும் உள்ள குழாய்கள் பழுதுபட்டதை சரி செய்தல். | 1922 |
| 12 | மெயின் ரோட்டில் எஸ்.பி.டி. பாங்க் பக்கமும் மற்றும் சுந்தர் பிரஸ் அருகாமையிலும் அமைந்துள்ள 110 எம்.எம். பிவிசி நீருந்தும் முக்கிய குழாய் பழுதுபட்டதை சரி செய்தல். | 3320 |
| 13 | துறைமுகத்தெருவில் குடிநீர் பொதுக்குழாயில் 4 இடங்களில் பழுதுபட்டதை சரி செய்தல். | 1898 |
| 14 | துறைமுகத்தெருவில் தூய மரியன்னை பள்ளி பக்கம் அமைந்துள்ள 90 எம்.எம். பிவிசி குழாயிலும், பள்ளி ஜங்சனில் அமைந்துள்ள 110 எம்.எம். நீருந்தும் குழாயிலும் ஏற்பட்ட பழுதினை சரி செய்தல். | 2680 |
| 15 | பீச் ரோடு கல்யாண மண்டபம் அருகில் 140 எம்.எம்.பிவிசி குழாயிலும், பர்னட்டிவிளை பம்பு ரூம் அருகில் அமைந்துள்ள 140 எம்.எம். பிவிசி குழயில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்தல். | 6236 |
| 16 | வெள்ளிப்பிள்ளையார்கோவில் தெருவில் 2–வது பம்பு அறையில் பொருத்தப்பட்டுள்ள 100 எம்.எம். சி.ஐ.டி. சுவிஸ் வால்வு சரி செய்தல் | 5391 |
| 17 | வி.கே.வி. பள்ளிக்கூடம் அருகாமையில் முக்கிய சாலை ஓரத்தில் அமைந்துள்ள பம்பு அறையில் பொருத்தப்பட்ட பானல் போர்டு பழுதுபட்டதை சரி செய்தல். | 3310 |
| 18 | நகராட்சி அலுவலகம் முன்பக்கம் மெயின்ரோடு ஓரத்தில் அமைந்துள்ள 160 எம்.எம் .நீருந்தும் முக்கிய குழாயும், சிங்காரவேலர் காலனி பக்கம் மேற்கு கடற்கரை சாலை ஓரத்தில் அமைந்துள்ள 110 எம்.எம். பி.வி.சி,முக்கிய குழாயும் பழுதுபட்டதை சரி செய்தல். | 4861 |
| 19 | 15–வது வார்டில் அமைந்துள்ள நகராட்சி பொதுக் கழிப்பிடத்தில் புதிதாக குழாய் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல். | 3336 |

| | | |
|---|---|---|
| 20 | வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெருவில் 1–வது ஆழ்குழாய் கிணறு பக்கம் நீருந்தும் முக்கிய குழாய்களில் இணைப்பு வழங்கி அதில் 80 எம்.எம். சி.ஐ.டி. சுவிஸ் வால்வு பொருத்துதல். | 6517 |
| 21 | பர்னட்டிவிளை மின்கம்பம் எண்.48 ன் பக்கம் அமைந்துள்ள 140 எம்.எம். நீருந்தும் முக்கிய குழாயும், ஈழக்காணிவிளை அங்கன்வாடி பக்கம் அமைந்துள்ள 90 எம்.எம். பிவிசி குழாய் மற்றும் களிமார் பாலம் பக்கம் அமைந்துள்ள 90 எம்.எம் .பிவிசி குழாயும் பழுதுபட்டதை சரி செய்தல். | 5176 |
| 22 | குளச்சல் பேருந்து நிலையத்தின் முன் பக்கம் மெயின்ரோட்டில் 160 எம்.எம்.முக்கிய குழாயும், றாபின் மருத்துவமனை அருகில் அமைந்துள்ள 160 எம்.எம் .பிவிசி முக்கிய குழாயும் உடைப்பு ஏற்பட்டு பழுதுபட்டதை சரி செய்தல். | 6792 |
| 23 | துறைமுகத்தெரு ஆர்.சி.சர்ச் முன்பக்கம் அமைந்துள்ள 110 எம்.எம்.நீருந்தும் முக்கிய குழாய் பழுதுபட்டதனை சரி செய்தல். | 4483 |
| 24 | ஈழக்காணிவிளையில் 90 எம்.எம்.பிவிசி வினியோக குழாயும், சார்பதிவாளர் அலுவலகம் பக்கம் அமைந்துள்ள 60 எம்.எம். பிவிசி குழாயும் மற்றும் பள்ளி ரோட்டில் அமைந்துள்ள 90 எம்.எம். பிவிசி குழாயும் உடைப்பு ஏற்பட்டு பழுதுபட்டது அதனை சரி செய்தல். | 3369 |
| 25 | வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெருவில் அமைந்துள்ள 6–வது ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்ட 10 குதிரை வேகம் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதுபட்டதை சரி செய்தல். | 12506 |
| 26 | பர்னட்டிவிளையில் அசம்பிளி ஆப் காட் சர்ச்சிற்கு முன்பக்கம் அமைந்துள்ள 140 எம்.எம். பிவிசி முக்கிய குழாயிலும், கொட்டில்பாடு பம்பு ரூம் பக்கம் அமைந்துள்ள 110 எம்.எம். பிவிசி முக்கிய குழாயிலும் ஏற்பட்ட உடைப்பினை சரி செய்தல். | 4010 |
| 27 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் மெயின் ரோட்டில் கிரி தங்கம் மருத்துவமனை முன்பக்கம் அமைந்துள்ள 90 எம்.எம். பிவிசி குழாயிலும், கல்லத்திவிளையில் அமைந்துள்ள 63 எம்.எம். பிவிசி வினியோகக் குழாயும், துறைமுகத் தெருவில் பொதுக் கழிப்பிடத்தில் பொருத்தப்பட்டுள்ள குழாய்களும் பழுதுபட்டுள்ளது. அதனை சரி செய்தல். | 3762 |
| 28 | கொட்டில்பாடு ஆர்.சி. சர்ச் முன்பக்கம் 90 எம்.எம். பிவிசி குழாய் சரி செய்தல். | 1217 |
| 29 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் மரமடி பொதுக் கழிப்பிடத்தில் உள்ள தண்ணீர் குழாயும், 14–வது வார்டில் பள்ளிக்கூடம் பக்கம் அமைந்துள்ள 90 எம்.எம். பிவிசி குழாயும், மற்றும் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் பக்கம் 63 எம்.எம். பிவிசி குழாயும் பழுதுபட்டது சரி செய்தல். | 2596 |
| 30 | குளச்சல் நகராட்சி குடிநீர் திட்டத்தில் வி.கே.பி. பள்ளிக்கூடம் பக்கம் அமைந்துள்ள போர்வெல்லில் பொருத்தப்பட்டுள்ள 50 எம்.எம். G.I.பைப்பும், தொலைபேசி அலுவலகம் பக்கம் அமைந்துள்ள 90 எம்.எம் .பிவிசி குழாயும் பழுதுபட்டதை சரி செய்து மாற்றி அமைத்தல். | 6393 |
| 31 | 6–வது பம்பு அறையில் பொருத்தப்பட்டுள்ள பானல் போர்டு பழுதுபட்டதை சரி செய்தல். | 3470 |
| 32 | குளச்சல் துறைமுகத் தெருவில் 14–வது வார்டில் வினியோக குழாயும், புதிதாக 80 எம்.எம். G.M. கேட் வால்வு பொருத்துதல். | 4006 |
| 33 | வி.கே.பி. பள்ளிக்கூடம் அருகாமையில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 50 எம்.எம்.G.I.Raiser Pipe ( 6 M) பழுதுபட்டதை சரி செய்தல். | 4700 |

அ.குறிப்பு : அவசர அவசியத்தை முன்னிட்டும், நகர் மக்களின் நலனை கருத்தில் கொண்டும், நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் மேற்குறிப்பிட்டுள்ள குடிநீர் திட்டப் பணிகளின் விலைப்புள்ளிகள் முறைப்படி பெற்று அதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. தெய்வசாமி என்பவரிடம் பணி ஒப்படைத்து நல்லமுறையில் முடிக்கப்பட்டது. எனவே அதற்கு செலவானத் தொகை ரூ. 1,52,549/–க்கும், இதில் முதல் தவணையாக ரூ 1,02,025/–. வழங்கியதையும், மீதமுள்ள தொகை ரூ. 50,524/–வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 88 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 29**

**குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :**

2004 டிசம்பர் திங்கள் 26–ம் நாள் ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டிடஙகள் (கொட்டில்பாடு முதல் குளச்சல் துறைமுகத்தெரு எண்.1வரை) இடிந்து தரைமட்டமாகின. இதனால் ஏற்பட்ட இடிபாடுகளின் பெரும்பகுதிகள் இன்னமும் அகற்றப்படாமல் இருப்பதால் மேற்படி பகுதிகளில் புல் மற்றும் செடி கொடிகள் வளர்ந்து காடு போல் காட்சியளிப்பதோடு பெரும் சுகாதாரக் கேட்டையும் உருவாக்கி வருகின்றது. எனவே மேற்படி இடிபாடுகளை சம்மந்தப்பட்ட பகுதிகளிலிருந்து பொக்லைன் இயந்திரங்கள் மூலமாக மொத்தமாக அகற்றுவதற்கு அரசிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக தமிழக அரசைக் கேட்டு இந்த மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண். 89 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் ஜனவரி திங்கள் 29–ம் நாள் காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

### பொருள்கள்

**பொருள் எண்: 1**

2006–2007–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டப் பணிகளுக்கு குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கீழ் குறிப்பிட்டுள்ள மின்கம்பங்கள் மற்றும் இடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துவதற்கு 1.43 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (செயல்முறை ஆணை எண்: 3–8125/2006 நாள் : 18.01.2007) என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை FII/1, FII/29, FII/37, FII/48. நெசவாளர் தெரு FIII/12, FIII/7, FIII/22, FIII/5. பள்ளிரோடு FII/1, CMC,4- 9, FII/13, (School), குளச்சல் பீச் FI/2, FII/105, FII/16, மரமடி FI/100, FI/44, FI/27, காமராஜர் சாலை FII/20, FI/33, மின்கம்பங்களில் சோடியம் விளக்குகள் அமைத்தல் மற்றும் கொட்டில்பாடு பகுதியில் 3 விளக்குகளும், சாஸ்தாங்கரை பகுதியில் 2 விளக்குகளும், களிமார் பகுதியில் 2 சோடியம் விளக்குகளும் அமைத்தல். | 1.43 |

**தீர்மானம் எண். 90 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 2</u>**

நகர்ப்புற உள்ளாட்சிகளில் பாதாளச் சாக்கடை அல்லது செப்டிக் டேங் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட கூடிய துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு கவசம் ரூ. 7000/– செலவுத் தொகையில் வாங்கி கொள்ளலாம் என அரசாணை ( நிலை எண்: 77 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் : 05.09.2006–ல் ) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.கஎண். 8685/2005/ஜே2 நாள்: 11.10.2006–ல் இந்நகராட்சியில் பாதாளச் சாக்கடை அல்லது செப்டிக் டேங் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு கவசமான இரசாயண பாதுகாப்புடன் கூடிய முழு முகமூடி மற்றும் இரப்பர் கையுறை (Full face chemical proofed gas mask, Nitril Rubber hand gloves) ஆகியன ஒரு யூனிட் ரூ. 7000/– செலவில் 5 யூனிட்டுகள் வாங்க ரூ. 35,000/– க்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மற்றும் செயல் முறை ஆணை மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மேற்படி செயல்முறை ஆணையின் படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து துப்புரவு பணியாளர்களுக்கான பாதுகாப்பு கவசம் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 91 அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி